Source: *Tamil Murasu*, p8
Date: 2 March 2026

இளையர்களின் வேகத்துக்கு உரமூட்டி விளையாட்டுப் போட்டி

காமினி ஹஷ்வின்

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் தமிழர் பேரவையும் சிண்டா இளையர் அமைப்பும் ஒருங்கிணைத்த 'ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா 2026', பிப்ரவரி 15 தேசிய பல்கலைக்கழகத்தின் பல்நோக்கு அரங்கம் 5ல் நடை பெற்றது.

காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்ற அப் போட்டியில், 16 முதல் 26 வயதுவரை உள்ள தமிழ் இளை யர்களும் மற்ற இன இளையர் களுமாக கிட்டத்தட்ட 300 இளை யர்கள் திரண்டு $2,000 மொத்த ரொக்கப் பரிசுகளுக்காகப் போட் டியிட்டனர்.

ஆண்களுக்கான காற்பந்துப் போட்டி, கலப்பு கேப்டன்ஸ் பால், பெண்களுக்கான இரட் டையர் பூப்பந்து விளையாட்டு என மூன்று முக்கியப் பிரிவு களாக போட்டி நடத்தப்பட்டது.

காற்பந்து, கேப்டன்ஸ் பால் போட்டிகளில் வெற்றி பெற்ற ஐந்திலிருந்து ஏழு வீரர்கள் வரை கொண்ட அணிகளுக்கு தலா $500 முதல் பரிசாக வழங் கப்பட்டது.

பெண்களுக்கான இரட் டையர் பூப்பந்து விளையாட்டின் வெற்றியாளர்கள் $150 ரொக் கத்தை தட்டிச் சென்றனர்.

அனைத்து விளையாட்டுப் பிரிவுகளிலும் இரண்டாம், மூன் றாம் இடங்களைப் பிடித்த அணிகளுக்கும் $50 முதல் $250 வரை ரொக்கப் பரிசுகள் வழங் கப்பட்டன.

"சிண்டா இளையர் குழு வுடன் இணைந்து இந்தப் போட் டிக்காக தயார் செய்வதாலும் பல பல்கலைக்கழகங்கள், பல துறைத் தொழிற்கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்விக் கழகங் கள் ஆகியவற்றிலிருந்து மாண வர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொள்வதாலும் இது தொடர்ந்து ஒரு வருடாந்தர நிகழ்வாக உருமாறியுள்ளது," என்றார் ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட் ராவின் ஒருங்கிணைப்புத் தலை வரான அர்ஷத் பின் அப்துல் ஜலீல், 25.

கல்லூரிகளின் முன்னாள் மாணவர்களுக்கு அந்நிகழ்வு தங்களுடன் படித்த நண்பர் களை மீண்டும் சந்திக்க ஒரு நல்ல வாய்ப்பாக அமைவதால் அவர்கள் ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா நடைபெறும் நாளுக் காக ஆவலுடன் காத்திருக்கின்ற னர் என்றார் அர்ஷத்.

"வெவ்வேறு பின்னணி களைச் சேர்ந்த மாணவர் களோடு போட்டியிடுவது ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது," என்றார் 'கேப்டன்ஸ் பால்' விளையாட்டில் பங்கேற்ற மில்லெனியா கல்விக்கழகத்தில் பயலும் வர்ஷா கணேசன், 18.

'கேப்டன்ஸ் பால்' என்பது ஒரு குழு விளையாட்டு என்ப தால் இதன்மூலம் விளையாட் டாளர்களுக்கு உரிய பெருந் தன்மை, குழுமுயற்சி ஆகிய விழுமியங்களை நாம் கற்றுக் கொண்டோம்," என்றார் அவர்.

ஜூரோங்-பைனியர் தொடக் கக் கல்லூரியின் முன்னாள் மாணவியான 19 வயது பிரகிதி செல்வராஜுவுக்கு பூப்பந்து விளையாட்டுப் போட்டியில் முதல்முறை ஒரு குழுவாக விளையாடியது புதுமையான அனுபவமாக இருந்தது.

டைமென்ஷன்ஸ் தொடக்கக் கல்லூரியின் ஜவஹர் அஷ் விதா, 19, போட்டியில் முதல் முறை பங்கேற்றதன் மூலம் நிறைய கற்றுக்கொண்டதாகச் சொன்னார். "தொடக்கம் முதலே போட்டியிட்ட அனைவரும் உற் சாகத்துடன் கடுமையாகப் போட் டியிட்டனர்," என்றார் 'கேப் டன்ஸ் பால்' விளையாட்டில் முதல் இடத்தில் வந்த குழுவின் ரினு ராஜ், 20.

kaamini@sph.com.sg

போட்டிகளில் உற்சாகமாகப் பங்கேற்ற இளையர்கள். **படம்: சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்**

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.